சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

அசல் வழக்கு எண்.356/2024 நாள்- 06.08.2025

**பி.வா.சா.1-பலராமராஜா**

**<u>பி. வா.சா.1-ன் குறுக்குவிசாரணை வாதி தரப்பில்</u>**

நான் 10 ம்வகுப்பு படித்துள்ளேன் வாதியின்கணவர் ஜெகநாதராஜாவும் நானும் சேர்ந்து விநாயகா பைனான்ஸ் என்ற பெயரில் கூட்டாண்மை நிறுவனம் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். விநாயகா பைனான்ஸ் என்ற பெயரில் கூட்டாண்மை நிறுவனம் நடத்தி வருவதற்கு முன்பாக நான் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரிந்த வந்தேன் என்றால் சரிதான். விநாயகா பைனான்ன்ஸ கூட்டாண்மை நிறுவனத்தில் நானும் வாதியின் கணவர் ஜெகநாதராஜாவும் மட்டும் தான் பங்குதாரர்கள் என்றால் சரிதான். விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் சுமார் 1987 ம் ஆண்டு ஆரம்பித்திருக்கலாம் விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். தற்போது விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் செயல்படவில்லை என்றால் சரிதான். விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனத்தின் வரவு செலவு கணக்கு விவரங்கள் எனக்கும் இறந்து போன ஜெகநாதராஜாவுக்கும் தெரியும் என்றால் சரிதான். எனக்கும் ஜெகநாதராஜாவுக்கும் விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் சம்பந்தமாக பிரச்சனை இல்லை என்றால் அவர் இறப்பதற்கு ஒரு வருடம் முன்பிலிருந்து எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது . ஜெகநாதராஜா விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் ஆரம்பிப்பதற்கு முன்பாக சைக்கிள் மார்ட் என்ற கடை நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஜெகநாதராஜாவை விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் ஆரம்பித்தற்கு 5 வருடங்களுக்கு முன்பிலிருந்து எனக்கு தெரியும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும், ஜெகநாதராஜா சரவண சைக்கிள் மார்ட் என்ற பெயரில்

கடை நடத்தி வந்த விவரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் விநாயகா டிரேடர்ஸ் பெயருக்கு தனியாக வரவு செலவு கணக்கு இருந்தது. விநாயகா டிரேடர்ஸ் பெயருக்கு வங்கியில் கணக்கு உண்டு. என்ன வகையான வங்கி கணக்கு என்று கேட்டால் நடப்பு கணக்கு இருந்தது அதன் நடப்பு கணக்கு எண் எனக்கு ஞாபகம் இல்லை. விநாயகா டிரேடர்ஸ் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்று கேட்டால் விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட வருடத்திலேயே விநாயகா டிரேடர்ஸ் ஆரம்பிக்கப்ட்டது. விநாயகா பைனான்ஸ கூட்டாண்மை நிறுவனத்திற்காக வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டிருந்த தொகையில் பங்கு கேட்டு அ.வ.எண்.762/2024 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.9 ல் விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனத்தின் வரவு செலவு கணக்கை நான் தற்போது வரை பராமரித்து வருவதாக கூறியுள்ளேனா என்று கேட்டால் சரிதான். வாசாஆ.9 ல் விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தை நானும் ஜெகநாதராஜாவும் சேர்ந்த நடத்தி வந்ததாகவும் விநாயகா டிரேடர்ஸ் நிறுவனமும், விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனமும் ஒரே வருடத்தில் ஆரம்பிக்கப்ட்டது என்றும், விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தின் வங்கி கணக்கு விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனத்தின் வங்கி கணக்கில் பராமரிக்கப்பட்டு வருவதாக கூறவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இலலை. விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தின் கணக்கு வழக்குகள் என் வசம் இருக்கிறாதா என்று கேட்டால் பாதி கணக்கு வழக்குகள் என் கைவசம் இருக்கிறது பாதி கணக்கு வழக்குகளை அவர்களே எடுத்துச் சென்று விட்டார்கள். என் கைவசம்

இருக்கும் பாதி கணக்கு வழக்குகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தில் கணக்கு வழக்குகள் என் கைவசம் ஒருபோதும் இருந்தது இல்லை என்றும்,விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்திற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதால் தான் கணக்கு வழக்குகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விநாயாக டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு வாதியின் கணவர் ஜெகநாதராஜா மட்டும் தான் உரிமையாளர் என்றும், 1ம் பிரதிவாதியின் வங்கியில் வைப்பீடு செய்ப்பட்டுள்ள தொகை வாதிக்கு மட்டும் தான் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தின் சார்பாக 1ம் பிரதிவாதியின் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள வைப்பீட்டு தொகை, தேதி , எந்த கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள என்றவிவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வாதி எவ்வளவு வைப்பீட்டு தொகை பரிகாரம் கோரியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தில் எனக்கு பங்கு வேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்போ, எதிர்கோரிக்கையோ கோரவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய நிருபணவாக்குமூலத்திலும், எதிர்உரையிலும் 27.07.1988 அன்று நானும், ஜெகநாதராஜாவும் சேர்ந்து ஒரு கூட்டாண்மை ஒப்பந்தம் பிறப்பித்துக் கொண்டோம் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விநாயகா டிரேடர்ஸ் நிறுவனம் மற்றும் விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை ஜெகநாதராஜாவின் மனைவி எடுத்துசென்று விட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. வழக்கிறஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். விநாயகா டிரேடர்ஸ் நிறுவனம் கணக்குவழக்குகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும் எ ன்று வழக்கு தாக்கல் செயய்யவில்லை என்றால் சரிதான். ஜெகநாதராஜா இறந்த பின்பு கணக்கு வழக்குகளை நான் எடுத்து வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் விநாயகா

பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை ஒப்படைத்தால் தான் விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் மற்றும் விநாயகா டிரேடர்ஸ் நிறுநவனத்தின் கணக்கு வழக்கு பற்றிய விவரம் தெரியவரும் என்றால் சரியல்ல. விநாயகா டிரேடர்ஸ் விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனத்தின் சகோதரி நிறுவனம் இல்லை என்றும், விநாயகா டிரேடர்ஸ் நிறுவனம் வாதியின் கணவரின் தனிப்பட்ட உரிமையாளர் நிறுவனம் என்றால் சரியல்ல. விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகள் 1ம் பிரதிவாதியின் வங்கியில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தின் வங்கி கணக்கின் அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால் தான் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். என்னுடைய செல்வாக்கின் காரணமாக தான் 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனம் சம்பந்தமாக 8 நபர்கள் தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அவஎண்.976/2024 வாதி கிருஷ்ணம்மாள் அவஎண்.977/2024 ல் வழக்கின் வாதி சொக்குதாயம்மாள் அவஎண்.1153/2024 வழக்கின் வாதி சரஸ்வதி , அவஎண்.1158/2024 வழக்கின் வாதி லிங்கம்மாள் ஆகியோர்கள் என் உடன் பிறந்தசகோதரிக்ள் என்றால் சரிதான். அவஎண்.1155/2024 வழக்கின் கணே ஷ்ராம்ராஜா சொக்குத்தாயம்மாளின் மருமகன் என்றால்ச ரிதான். அவஎண்.1133/2024 வழக்கின் வாதி சிவசக்திராஜா சரஸ்வதியின் மகன் என்றால்ச ரிதான். அவஎண்.1159/2024 வழக்கின் வாதி அம்பிகா இராமலட்சுமியின் மகள் என்றால் ச ரிதான். இராமலட்சுமி என் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். அவஎண்.1131/2024 வழக்கின் வாதி முருக கணேஷ் லிங்கம்மாளின் மகன் என்றால் சரிதான். இந்த 8 வழக்கின் வாதிகள் என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் என்றும், வாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக மேற்படி நபர்களை

வைத்து மேற்கண்ட 8 வழக்குகளையும் தாக்கல் செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. விநாயகா பைனான்ஸில் பாகம் கேட்டு அவஎண்.762/2024 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். விநாயகா டிரேடர்ஸில் நான் பங்குதாரர் இல்லை என்றும், வாதியின் கணவர் மட்டுமே உரிமையாளர் என்றும், அதனால் தான் வைப்பீட்டு தொகை முழுவதும் வாதிக்கு கிடைக்க்கூடியது என்று பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றும், எனக்கு பங்கு இல்லை என்றும், எனக்கு பங்கு இருக்கிற விநாயகா பைனான்ஸ் கூட்டாண்மை நிறுவனத்தில் எனக்கு பாகம் கிடைக்ககூடியது என்று அவஎண்.762/2024 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனக்கு விநாயகா டிரேடர்ஸில் பங்கு இல்லை என்பதால் தான் அ.வ.எண்.762/2024 வழக்கிலேயே விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்திலும், எனக்கு பங்கு இருப்பதாக நான் கூறவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னை ஏமாற்றி மோசடி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தில் நான் எவ்வளவு தொகை முதலீடு செய்திருக்கேன் என்று நான் நிருபணவாக்குமூலத்திலும், வழக்குரையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல விநாயகா பைனான்ஸ் நிறுவனத்தில் உள்ள தொகை தான் விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஜெகநாத ராஜா தற்கொலை செய்து கொண்டார் என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இராஜபாளையம் பர்னிச்சர் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் சங்கத்தில் புகார் மனு கொடுத்தற்கான ஆவணங்களை தாக்கல் ெசய்யவில்லை என்றால் சரிதான். ஜெகநாதராஜா தொகையை கையாடல் செய்து இடம் வாங்கியுள்ளார் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இந்த வழககிற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்றும், வாதி வங்கியின் வைப்பீட்டில் உள்ள தொகையை பெறக்கூடாது எ ன்பதற்காக நான் என் குடும்ப உறுப்பினர்கள் மூலம் பல வழக்குகளை தாக்கல் செய்ய வைத்து வாதிக்கு

இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஜெகநாதராஜாவின் மகன் ஜெகநாதராஜா இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஜெகநாதராஜாவிற்கு வாதி மட்டுமே வாரிசு என்றால் சரிதான் . விநாயகா டிரேடர்ஸ் நிறுவனம் எந்த முகவரியில் செயல்பட்டு வந்தது என்று கேட்டால் விநாயகா பைனான்ஸ் நடைபெற்ற முகவரியில் தான் விநாயகா டிரேடர்ஸ் நிறுவனமும் நடந்தது . நான் சொல்வது தவறு என்றும், விநாயாக டிரேடர்ஸ் நிறுவனம் வேறு விநாயகா பைனான்ஸ் நிறுவனம் வேறு என்றால் சரியல்ல. விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தின் சம்பந்தமாக வங்கியில் இருந்து எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை. விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஜெகநாதராஜா என்றும் நான் பங்குதாரர் இல்லை என்றும், 1ம் பிரதிவாதியின் வங்கியில் இருக்கும் வைப்பீட்டு தொகை வாதிக்கு மட்டுமே கிடைக்கக்கூடியதென்றும் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.